
# எழுதி வளர்ந்த இயக்கம்

■ பேராசிரியர் சுப.வீரபாண்டியன் 22

**திராவிட இயக்கம், அதன் சிந்தனைகள், சாதனைகள் ஆகியவற்றைத் தாங்கி ஏராளமான புத்தகங்கள் வந்துகொண்டே இருக்கின்றன. அவற்றை எப்படித் தேர்வு செய்வது, எந்தப் புத்தகத்தைப் படிப்பது என்பதை அறிவுரைக்கிறது இந்தத் தொடர்...**

## தி.மு.க.வின் மொழிக் கொள்கை!

உலக அரசியல் வரலாற்றில், மொழிக்கென்று தனி இடம் உண்டு. மொழியின் ஆளுமையும், மொழிச் சிக்கல்களும் பல நாடுகளின் அரசியலையே தீர்மானித்திருக்கின்றன என்பதும் உண்மை. எடுத்துக்காட்டாக, நம் அண்டை நாடான வங்க தேசத்தையே எடுத்துக் கொள்ளலாம். அடிப்படையில் மத வழித் தேசியத்தை முன் வைத்தே, பாகிஸ்தான் என்று ஒரு நாடு உருவாகியது. ஆனால், அந்த மத உணர்வுகளையும் தாண்டி, உருது மொழியா - வங்க மொழியா என்னும் கேள்வி எழுந்து, மொழி வழித் தேசியத்தை அடிப்படையாகக் கொண்டு வங்கதேசம் (பங்களாதேஷ்) என இன்னொரு நாடு உருவான வரலாற்றை நாம் அறிவோம்.




இதனைப் போல் பல்வேறு உலக நாடுகளின் வரலாற்றில் மொழி பெற்றுள்ள இடம் குறித்து, தமிழிலும் ஆங்கிலத்திலும் பல நூல்கள் வெளி வந்துள்ளன. தமிழ்நாட்டின் வரலாற்றில், தமிழ் மொழி காப்பதிலும், வளர்ச்சியிலும் திராவிட இயக்கத்துக்கும், தி.மு.கழகத்துக்கும் குறிப்பிடத்தக்க இடம் உண்டு.

தமிழ்நாட்டின் மொழிப் போராட்ட வரலாற்றை அறிந்துகொள்வதற்கு முன், தி.மு.கழகத்தின் மொழிக் கொள்கை என்ன என்பதை, நாம் அறிந்துகொள்ள வேண்டும். சுருக்கமாகச் சொன்னால், பேரறிஞர் அண்ணாவின் மொழிக் கொள்கையே, தி.மு.க.வின் மொழிக் கொள்கை. அது குறித்து, ஆழமாகவும் சான்றுகளோடும் எழுதப்பட்டிருக்கும் ஒரு நூல்தான் ‘அண்ணாவின் மொழிக் கொள்கை’ என்பதாகும். பேராசிரியர், முனைவர், முன்னாள் துணைவேந்தர் அ.இராமசாமி அவர்கள் அந்நூலை எழுதியிருக்கிறார்.

### அடிப்படையை விளக்கும் நூல்

இந்நூலில் நீதிக்கட்சி தொடங்கப்பட்ட 1916-ஆம் ஆண்டு முதல், 1967-ஆம் ஆண்டு வரையில் தமிழ்நாட்டில் நடைபெற்ற, திராவிட இயக்கம் நடத்திய மொழிப் போராட்டங்கள் பற்றிய செய்திகளும் உள்ளன. போராட்டங்களில் எத்தனை இன்னுயிர்கள் பலியாயின, எவ்வளவு தியாகங்கள் செய்யப்பட்டன, எத்தனை பெரிய இழப்புகளைச் சந்திக்க நேர்ந்தது என்பன போன்ற பல்வேறு செய்திகள் உள்ளடங்கியுள்ளன.

ஆனால், இந்தப் போராட்டங்களுக்கு எல்லாம் அடிப்படையாகவும் தூண்டுதலாகவும் இருந்தது எது? நம் கழகத்தின் மொழிக் கொள்கைதான். சமூக நீதி போன்ற கோட்பாடுகளில் முழுமையாக தந்தை பெரியாரை அடியொற்றிச் செல்லும் தி.மு.கழகம், மொழிக் கொள்கையில் சில சிறு வேறுபாடுகளையும் கொண்டுள்ளது. அது குறித்தும் நுட்பமாக இந்நூல் விளக்குகிறது!

### மக்கள் மொழியும், இலக்கிய மொழியும்

1937-ஆம் ஆண்டு, கரந்தை தமிழ்ச் சங்கம் முதலான அமைப்புகளால் முன்னெடுக்கப்பட்ட இந்தி எதிர்ப்புப் போராட்டம், பெரியார் அவர்கள் உள்நுழைந்த பின்பே, வீறுகொண்டு எழுந்து, மக்கள் போராட்டமாக மாறியது. எனவே, தமிழ் மொழிக்கான போராட்டத்திலும், பெரியாரே முன் நிற்கிறார் என்றாலும், தமிழ் மொழி தொடர்பான அணுகுமுறையில், பெரியாருக்கும் அண்ணாவுக்கும் சில வேறுபாடுகள் இருக்கவே செய்தன.

தமிழ் மொழியின் சிறப்பு, பெருமை, தொன்மை குறித்தெல்லாம், பெரியார் நீளப் பேசியதில்லை. அங்கங்கே தொட்டுக் காட்டியதோடு சரி. எந்த ஒரு மொழியும், இன்னொரு மொழியின் மீது ஆதிக்கம் செலுத்தக் கூடாது என்னும் பொதுமைப் பார்வைதான் பெரியாரிடம் கூடுதலாக இருந்தது. ஆனால், அறிஞர் அண்ணா அவர்கள்தான், தமிழ் மொழியின் தொன்மை, பெருமை பற்றியெல்லாம் உணர்ச்சி பொங்க எடுத்துச் சொல்லி, இளைஞர்களிடத்திலே மொழி உணர்வை ஊட்டினார் என்பதை மறுக்க முடியாது. அந்த உணர்வூட்டலே, பிறகு நடைபெற்ற வீரியமிக்க மொழிப் போராட்டங்களுக்கு விதையாக அமைந்தது.

எழுத்து, பேச்சு என்னும் இரு வடிவங்களிலும், பெரியாரும் - அண்ணாவும் பயன்படுத்திய தமிழ் மொழிநடை வேறு வேறாகவே இருந்தது. பெரியாரின் மொழி, மக்கள் மொழியாகவும் - அண்ணாவின் மொழி, உணர்ச்சிமிக்க, இலக்கிய மொழியாகவும் அமைந்தது. இரண்டும் இரண்டு விதங்களில் பயன்பட்டன. உண்மையை அறிந்து கொள்ள பெரியாரும், உண்மைகளோடு சேர்த்து உணர்ச்சிகளையும் பெற்றிட, அண்ணாவும் உதவினார்கள்.

**தமிழ் மொழிக்காக மட்டுமின்றி, எல்லோருடைய தாய்மொழிக்காகவும் குரல் கொடுத்தவர் அண்ணா.**



அ.இராமசாமி

### இருவரின் இருமொழிக் கொள்கை

இந்தச் சிறு வேறுபாடுகளைத் தாண்டி, இருவரிடமும் இருந்த அடிப்படையான, மிகப்பெரிய ஒற்றுமை என்பது இருமொழிக் கொள்கையே ஆகும். அந்தக் கொள்கைதான் இன்றளவும் தமிழ் மக்கள் அறிவியலிலும், உலகத் தொடர்புகளிலும் உயர்ந்து நிற்பதற்குப் பெரும் காரணமாக இருக்கிறது. இந்தி உட்பட எந்த ஒரு மொழியையும் கற்றுக்கொள்ளக் கூடாது என்று பெரியாரோ, அண்ணாவோ கூறவில்லை. ஆனால் தமிழ், ஆங்கிலம் இரு மொழி அறிவு அடிப்படையானதும் தேவையானதும் ஆகும். மற்ற மொழிகளைக் கற்றல் என்பது, அவரவர் தேவையையும் திறமையையும் பொறுத்தது என்பதே திராவிடக் கொள்கை.

இதனை அறிஞர் அண்ணா அவர்கள், இந்திய நாடாளுமன்ற மாநிலங்களவையில் உறுப்பினராக இருந்தபோது (1962-67) பல முறை மிக அழுத்தமாகக் கூறியிருக்கிறார். அதனையும் தாண்டி, எட்டாவது அட்டவணையில் அன்று ஏற்கப்பட்டிருந்த 14 (இன்று அதன் எண்ணிக்கை 22) மொழிகளையும் ‘தேசிய மொழிகள்’ என்று அறிவியுங்கள் என்பதே அவருடைய கோரிக்கையாக இருந்தது. தமிழ் மொழிக்காக மட்டுமின்றி, எல்லோருடைய தாய்மொழிக்காகவும் குரல் கொடுத்தவர் அண்ணா. என்றாலும், இந்தியாவுக்குள்ளும், உலக அளவிலும் தொடர்பு கொள்வதற்கு ஆங்கிலத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதை அவர் வலியுறுத்தினார்.

### ஆங்கிலத்தின் மீது மோகமா?

பெரியாரும், அண்ணாவும் ஆங்கில மொழியின் மீது மோகம் கொண்டவர்கள் என்றும், தமிழைவிட ஆங்கிலத்தையே உயர்த்திப் பிடித்தார்கள் என்றும் ஓர் அவதூறு இன்றும் பரப்பப்பட்டுக் கொண்டிருக்கிறது. எந்த இடத்திலும் அவர்கள் நம் தாய் மொழியை விட்டுக் கொடுத்ததில்லை. அதே நேரத்தில் தமிழர்கள் முன்னேற வேண்டுமானால், அதற்கு ஆங்கில அறிவு தேவைப்படும் என்பதை வலியுறுத்தத் தயங்கியதும் இல்லை.

ஆங்கில மொழியைப் பரிந்துரைப்பதற்கு, அம்மொழியின் மீதான எந்த மோகமும் காரணமில்லை. ஏற்கெனவே, ஆங்கிலம் உலகத்தில் பல நாடுகளில் பேசப்படுகிற, அறியப்பட்ட மொழியாக இருப்பதனால், அதனைக் கற்றுக் கொள்வது, நம் இனத்தின் முன்னேற்றத்துக்கு உதவும் என்பதனாலேயே, அந்த மொழிக் கொள்கையை அவர்கள் பரிந்துரைத்தனர். அதன் பயனை இன்று நாம் கண்கூடாகக் காண்கிறோம். உலக அளவில் தகவல் தொழில்நுட்பத் துறையில், இன்று இந்தியாவிலேயே தமிழ்நாட்டுப் பிள்ளைகள்தான் முதல் வரிசையில் நிற்கிறார்கள் என்பது எல்லோரும் அறிந்த உண்மை. ஆங்கிலத்தைப் புறக்கணித்த வடமாநிலங்கள் பல, தங்கள் மக்களின் பின்னடைவுக்குக் காரணமாக இருக்கின்றன என்பதும் அதே அளவிலான இன்னொரு உண்மை.

### என்றும் ஒரே நிலை!

‘எதிர்க்கட்சியாக இருக்கும்போதுதான், தி.மு.க. தமிழ் குறித்தும், இந்தி எதிர்ப்புக் குறித்தும் பேசும். ஆளும் கட்சியான உடன் அவற்றைக் கைவிட்டுவிடும்’ என்னும் அவதூறும் அடிக்கடி சொல்லப்படுகிறது. அதில் துளியும் உண்மை இல்லை என்பதற்கு, 1968-ஆம் ஆண்டு அண்ணா அவர்கள் கூட்டிய சிறப்பு சட்டமன்றக் கூட்டமே எடுத்துக்காட்டாகும்.

1968-ஆம் ஆண்டு ஜனவரி 23 அன்று, தமிழ்நாட்டில் மொழிக் கொள்கை பற்றிப் பேசுவதற்காக மட்டுமே, அண்ணா அவர்கள் சட்டமன்றத்தைக் கூட்டினார். அன்று வேறு எந்தச் சிக்கல் குறித்தும் யாரும் பேசவில்லை. கூட்டத்தின் இறுதியில், “இனிமேல் தமிழ்நாட்டில், பள்ளிக்கூடங்களிலும், பிற இடங்களிலும் மும்மொழிக் கொள்கை என்பது அறவே கிடையாது. தமிழ், ஆங்கிலம் என்னும் இரு மொழிக் கொள்கையே இனி இங்கு நீடிக்கும்” என்னும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அரை நூற்றாண்டு கடந்தும் அந்தக் கொள்கைதான் இன்றும் தமிழ்நாட்டில் நிலைபெற்று உள்ளது. எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா கைகளுக்கு ஆட்சி மாறிய போதும், இந்தக் கொள்கையை அவர்கள் மாற்றவில்லை, மாற்றவும் முடியாது.

-வாசிப்போம்

---

## திராவிட இயக்க இதழ்கள் - கலைமன்றம்

சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு, கோவை மற்றும் மதுரை ஆகிய இடங்களில் கிளைகளை கொண்ட ஸ்ரீமகள் எனும் நிறுவனம், 1954 -ஆம் ஆண்டு முதல், எழுத்தாளர் பால்வண்ணன் என்பவரை ஆசிரியராகக் கொண்டு **‘கலைமன்றம்’** என்ற இதழை வெளியிட்டு வந்தது. 80 பக்கங்கள் கொண்ட அந்த இதழின் முகப்பு அட்டையின் மேலே இதழ் பெயருடன், ஆசிரியர் பெயரும் இடம்பெற்றுள்ளது.




இதழின் முதல் பக்கத்தில், அந்த இதழில் என்னென்ன விஷயங்கள் இடம்பெற்றுள்ளன என்பது பற்றிய பொருளடக்கமும், அந்தப் பக்கத்தின் கீழே, ‘திராவிடர் முற்போக்கு வார இதழ்’ என்ற வரியும் உள்ளன. இதழின் விலை 4 அணா.

தலையங்கம், கேலிச் சித்திரம், துணுக்குகள், தொடர்கள், கவிதைகள், சிறுகதைகள், மொழிபெயர்ப்புச் சிறுகதைகள், உலகச் செய்திகள், வாசகர் கேள்வி பதில், ஆகியவற்றுக்கிடையே, முழுமையான நாடகப் பிரதிகளுக்கும் இந்த இதழ் இடம் தந்திருக்கிறது. கழக நிகழ்வுகளை அறிவிப்பதற்காக, ‘கழகச் செய்திகள்’ என்ற தனிப் பகுதியும் இந்த இதழில் இருந்திருக்கிறது.

‘ஏன்?’ என்ற தலைப்பில் ஒரு கற்பனையான சம்பவத்தைப் பற்றிக் குறிப்பிட்டு, அது தொடர்பான கேள்விக்குப் பொருத்தமான பதில் அனுப்புவோருக்கு 10 ரூபாய் பரிசு வழங்கும் வழக்கத்தை அந்த இதழ் கொண்டிருந்தது. அதேபோல ‘புகைப்படக் கலைப்பகுதி’க்கு தரமான புகைப்படங்கள் அனுப்புவோருக்கு முதல் பரிசாக 10 ரூபாயும், இரண்டாம் பரிசாக 5 ரூபாயும் வழங்கப்பட்டிருக்கிறது.

1955-ஆம் ஆண்டு வெளிவந்த சில இதழ்கள் மட்டும் தற்போது கிடைக்கின்றன. அந்த இதழ்களின் அட்டையில் இயக்க வீரர் ஒருவரின் படம் இடம்பெற்றுள்ளது. இதழின் உள் பக்கங்களில், அந்த வீரரின் வரலாறும் சொல்லப்பட்டுள்ளது. அந்த இதழ்களில் ஏ.வி.பி.ஆசைத்தம்பி எழுதிய புத்தகங்களின் விளம்பரங்கள் தென்படுகின்றன. இந்த இதழின் ஆசிரியர் பால்வண்ணன் வேறு யாருமல்ல. பிரபல சிறார் எழுத்தாளர் பூவண்ணனின் அண்ணன் தான் அவர்.

---

## :ப்ளாஷ்பேக்





மாணிக்கம்

### நல்லா எழுதணும்!

அவசர நிலை பிரகடனத்தைக் காரணம் காட்டி கழக ஆட்சி கலைக்கப்பட்ட 1976-ஆம் ஆண்டு, மதுரை யாதவர் கல்லூரியில் ஆங்கில இலக்கியத் துறையில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். சிட்டி பாபு ஆசிரியராக இருந்த ‘கழகக் குரல்’ பத்திரிகையில் அவ்வப்போது கட்டுரைகளும் எழுதி வந்தேன். அந்த ஆண்டு மே முதல் வாரத்தில் தலைவர் கலைஞரை நேரில் சந்தித்து, மிசா வழக்கு நிதி வழங்கினேன். நான் எழுதிய கட்டுரைகள் பற்றி அவரிடம் சொல்லிய போது, ‘நல்லா எழுதணும்’ என்று வாழ்த்தும் ஊக்கமும் அளித்தார்.

**-பெரியய்யா மாணிக்கம்,
அலவாக்கோட்டை,
சிவகங்கை மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

---


## கருவூலம்

### கலைஞரும் காரும்

**1960-ஆம் ஆண்டு, தனது திரைத்துறை வருமானத்தின் மூலம் பெரிய கார் வாங்கினார் கலைஞர். அதுவரை சிறிய காரை பயன்படுத்தி வந்தார். முன்னர் ஏற்பட்ட விபத்தில், ‘இடது கண்ணில் ஏற்பட்ட பிரச்சினை சிறிய கார்களால் மேலும் சிக்கலாகும்’ என மருத்துவர்கள் எச்சரித்தனர். அதனால், பெரிய காருக்கு மாறினார். ஆனால், அவரது எதிர்ப்பாளர்கள் மனிதாபிமானமற்ற முறையில் அதை விமர்சனம் செய்தனர். கழகத் தொண்டர்களோ அந்த விமர்சனத்தைப் பொருட்படுத்தவே இல்லை.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 161




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.